முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் II பரீட்சை – 2025 சனவரி

## (204) வணிக முகாமைத்துவம்

(Business Management)

2025-02-02
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 06
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** தனிநபர்கள் மற்றும் குழுவுடன் பயனுறுதிமிக்க வகையில் தொடர்பு கொள்ளவும், எதிர்வினையாற்றவும் பணியாற்றவும் தேவையான திறன்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) கண்டறிதல் (diagnostic) திறன்கள். (2) தொழினுட்பத் (technical) திறன்கள்.
(3) தனிமனிதத் (interpersonal) திறன்கள். (4) எண்ணக்கருசார் (conceptual) திறன்கள்

**1.2** குறித்த காலப்பகுதியில் ஒரு நிறுவனத்தின் உள்ளீடுகளுக்கும் வெளியீடுகளுக்கும் இடையேயான தொடர்பு :

(1) பயனுறுதித்தன்மை. (2) உற்பத்தித்திறன்.
(3) முகாமைத்துவம். (4) வினைத்திறன்.

**1.3** மனித வள முகாமைத்துவத்தில் வேலை வடிவமைப்பில் பயன்படுத்தப்படும் ஒரு நுட்பம் / முறை கீழ்வருவனவற்றில் எது?

(1) வேலை விரிவாக்கம் (enlargement) (2) வேலைச் சுழற்சி (rorating)

(3) வேலை மேம்பாடு (enrichment) (4) மேற்கூறிய யாவும்.

**1.4** கீழ்வரும் கூற்றுக்களைக் கவனத்திற் கொள்க:

**(a)** இது நகரக்கூடிய, சுறுசுறுப்பான மற்றும் உயிருள்ளது.

**(b)** இது நிறுவனத்தின் மற்றைய அனைத்து வளங்கள் தொடர்பாகவும் தீர்மானம் மேற்கொள்கிறது.

**(c)** இதனது நடத்தை எளிமையானது, அதனால் அது யூகிக்கக்கூடியது.

மேற்படி கூற்றுக்களில், ஒரு நிறுவனத்தின் மனித வளங்கள் தொடர்பில் சரியான கூற்றை / கூற்றுக்களைத் தெரிவு செய்க :

(1) **(a)** மாத்திரம். (2) **(a)** யும் **(b)** யும் மாத்திரம்.

(3) **(a)** யும் **(c)** யும் மாத்திரம். (4) **(b)** யும் **(c)** யும் மாத்திரம்.

**1.5** கீழ்வருவனவற்றில் போட்டரின் பெறுமதிச் சங்கிலியில் உள்ள முதன்மைச் செயற்பாடு எது?

(1) சந்தைப்படுத்தலும் விற்பனையும். (2) உட்கட்டமைப்பு.

(3) மனித வள முகாமைத்துவம். (4) தொழினுட்ப அபிவிருத்தி.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*வினா இல. 1.6 தொடக்கம் 1.10 வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல் / சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.6** ............ *(இலக்குப்படுத்தல் / நிலைப்படுத்தல்)* என்பது போட்டியாளர்களுடன் தொடர்புடைய ஒரு பண்டக்குறி அல்லது உற்பத்திப் பொருள் தொடர்பான நுகர்வோரின் புலனுணர்வில் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றலைக் குறிக்கிறது.

**1.7** ............ *(ஒருங்கிணைத்தல் / சந்தைப்படுத்தல்)* என்பது வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் ஒரு கூறு (element) ஆகும்.

**1.8** ............ *(உற்பத்தி / உற்பத்திப்பொருள்)* எண்ணக்கருவின்படி, வாடிக்கையாளர்கள் அதிக தரம் வாய்ந்த பொருள்களை விரும்புகிறார்கள்.

**1.9** ............ *(சந்தை வளர்ச்சி / சந்தைப் பங்கு)* என்பது ஒரு குறிப்பிட்ட கம்பனியால் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதி ஈறாக சம்பாதித்த சந்தையின் மொத்த விற்பனை ஆகும்.

**1.10** ............ *(அணுகக்கூடியது / நெகிழக்கூடியது)* என்பது பயனுறுதிமிக்க துண்டமாக்கலுக்கான ஒரு தேவைப்பாடாகும்.

(01 புள்ளி வீதம், 05 புள்ளிகள்)

*இல. 1.11 தொடக்கம் 1.15 வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.11** ஒரு வெற்றிகரமான பண்டக்குறிக்கான (brand) இரண்டு (02) தேவைப்பாடுகளைப் பட்டியலிடுக.

**1.12** தொழிற்பாட்டு முகாமைத்துவத்தில் பயன்படுத்தப்படும் தானியங்கித் தொழினுட்பங்கள் (automation technologies) இரண்டைக் (02) குறிப்பிடுக.

**1.13** யப்பானிய முகாமைத்துவப் பாணியின் இரண்டு (02) பண்பியல்புகளைக் (characteristics) குறிப்பிடுக.

**1.14** டிஜிடல் சந்தைப்படுத்தலின் இரண்டு (02) பிரதிகூலங்களைக் குறிப்பிடுக.

**1.15** வெகுமதி முகாமைத்துவத்தின் இரண்டு (02) நோக்கங்களைக் (objectives) குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

தற்போதைய ஸ்திரமற்ற வணிகச் சூழலில், முன்னணி நிறுவனங்களில் உள்ள முகாமையாளர்களின் வகிபாகம் முக்கியமானதாக மாறிவருகிறது. இலங்கையில் இருந்து அதிக அளவில் திறமைசாலிகள் வெறியேறுவதன் காரணமாக தகவல் தொழினுட்பவியல் (IT) போன்ற சில தொழில்துறைகளில் நிறுவனத்திற்கு சரியான ஆற்றல் மிக்கவர்களை ஈர்த்துக்கொள்வதும் அவர்களைத் தக்கவைத்துக் கொள்வதும் சவாலானதாகக் காணப்படுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) தற்போதைய நிச்சயமற்ற சூழலில் முகாமையாளர்கள் எதிர்நோக்கும் நான்கு (04) சவால்களைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(b) புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு IT நிறுவனத்தில் உள்ள ஊழியர்களிடமிருந்து உயர்ந்தபட்ச வெளியீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு, ஊக்கப்படுத்தலுக்கான உரிமையாண்மைக் கோட்பாட்டை (equity theory) எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) "ஒரு நவீன IT நிறுவனம் ஒன்றிற்கு அதிகாரத்துவ முகாமைத்துவக் கோட்பாடு என்பது மிகப் பொருத்தமான முகாமைத்துவ அணுகுமுறை ஆகும்."

மேற்படி கூற்றுடன் நீங்கள் இணங்குகிறீர்களா என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

ஒரு பரபரப்பான சந்தைப்படுத்தல் நிறுவனத்தில், செயற்றிட்டத் தலைவராக உள்ள **சாரா,** ஒரு பெரிய பிரச்சாரத்திற்கான இறுக்கமான காலக்கெடுவை எதிர்கொள்கிறார். பல்வேறு தந்திரோபாயங்களின் நன்மை, தீமைகளை எடைபோட்டுப் பார்த்து, கடந்த காலச் செயற்றிட்டங்களில் இருந்து தரவுகளை மதிப்பீடு செய்வதற்கு அவர் தனது அணியை ஒன்றுதிரட்டுகிறார். சாத்தியமான வெளியீடுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையைப் பயன்படுத்துவதன் மூலம், அவர்கள் கூட்டாகச் சேர்ந்து சிறந்த தெரிவொன்றைத் தேர்வுசெய்து, உரிய நேரத்தில் வெற்றிகரமாகத் தொடங்குவதை உறுதி செய்கின்றார்கள்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒரு நிறுவனத்திற்கு திட்டமிடல் ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **சாராவின்** நிறுவனம் திட்டமிடலில் எதிர்கொள்ளக்கூடிய நான்கு (04) தடைகளைக் (barriers) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**Green Tech (Pvt) Ltd.** இல், ஒழுங்கமைப்புக் கட்டமைப்பானது (organizational structure) தனித்துவமான துறைகளைக் கொண்டுள்ளது : சந்தைப்படுத்தல், பொறியியல் மற்றும் வாடிக்கையாளர் உதவி என்பனவே அத்துறைகள் ஆகும். இந்த ஒவ்வொரு துறையும் தெளிவான வகிபாகங்களையும் பொறுப்புகளையும் கொண்டிருப்பதுடன், ஒத்துழைப்பையும் வளர்க்கிறது. வழமையான துறைகளுக்கிடையிலான கூட்டங்கள், செயற்றிட்டங்களின் சீரமைப்பை உறுதி செய்கின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Green Tech (Pvt) Ltd.** இற்கான ஒழுங்கமைப்பின் (organizing) இரண்டு (02) முக்கியத்துவங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) பயனுறுதிமிக்க அதிகாரக் கையளிப்புக்கான இரண்டு (02) தடைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) அணி (matrix) கட்டமைப்பொன்றின் இரண்டு (02) அனுகூலங்களைப் **பட்டியலிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**Innovate Ltd.** இல், தலைமைத்துவ அணியானது நிறுவனத் தொடர்பாடலை மேம்படுத்துவதற்காக, இரு வாரங்களுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் செய்தி மடல் ஒன்றை வெளியிட ஆரம்பித்தது. இந்தச் செய்தி மடலானது செயற்றிட்டப் புதுப்பிப்புகள், ஊழியர்களின் சாதனைகள் மற்றும் அடுத்து வரவுள்ள நிகழ்வுகள் ஆகியவற்றை எடுத்தியம்புகிறது. மேலும், பின்னூட்டங்களையும் யோசனைகளையும் பகிர்ந்து கொள்வதற்காக ஊழியர்களுக்கான திறந்த மன்றங்கள் (open forums) நடத்தப்படுகின்றன. இதன் விளைவாக, ஒத்துழைப்பு அதிகரிப்பதுடன் ஊழியர்கள் தாம் அதிகம் தொடர்புபடுத்தப் பட்டுள்ளதாகவும் தகவல்களை அறிந்தவர்களாக இருப்பதாகவும் உணர்கின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) நவீன வணிக நிறுவனங்களில் தொடர்பாடல் என்பது ஏன் ஒரு முக்கிய தொழிற்பாடாக மாறிவருகிறது என்பதற்கான இரண்டு (02) காரணங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) ஒரு நிறுவனத்திற்கு முறைசாரா தொடர்பாடலின் (informal communication) இரண்டு (02) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) தற்காலச் சூழமைவில் மனித வள முகாமைத்துவத்தில் உள்ள இரண்டு (02) புத்தாக்கங்களை (innovations) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**Future Tech (Pvt) Ltd.** இன் பிரதம நிறைவேற்று அதிகாரியான **லிஷா,** பாரம்பரிய மென்பொருளில் இருந்து AI – உந்தப்பட்ட தீர்வுகளுக்காக தைரியமாக ஒரு புதிய தந்திரோபாயத்தை நடைமுறைப்படுத்து கிறார். மாற்றத்திற்கான அவசியத்தை உணர்ந்து, இந்த மாற்றத்தைச் செயற்படுத்துவதற்காக தனது முகாமையாளர்களுக்கு அதிகாரம் அளிக்க, அவர் தொடரான தலைமைத்துவ வேலைப்பட்டறைகளை (workshops) ஏற்பாடு செய்கிறார். புத்தாக்கம் மற்றும் திறந்த தொடர்பாடல் கலாசாரம் ஒன்றை வளர்ப்பதன் மூலம், **லிஷா** தனது அணியை மாற்றத்தைத் தழுவுவதற்கு உத்வேகப்படுத்துவதுடன் போட்டிச் சந்தையில் வெற்றிக்கான கம்பனியின் புதிய தொலைநோக்கை அடைவதில் அனைவரும் தமது வகிபாகத்தைப் புரிந்து கொள்வதை உறுதி செய்கிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Future Tech (Pvt) Ltd.** இற்கான தந்திரோபாயத்தின் இரண்டு (02) வகிபாகங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) ஒரு சிறந்த தந்திரோபாயத்தின் இரண்டு (02) பண்பியல்புகளைக் (characteristics) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) மாற்றத்தின் இரண்டு (02) சக்திகளை (forces) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 07

**ஆன்** என்பவர் **Sunshine (Pvt) Ltd.** இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ஆவார். அவர் படைப்பாற்றல் செழித்து வளரும் ஒரு கூட்டுக் கலாசாரத்தை வளர்ப்பதன் மூலம் ஆற்றல்மிக்க தலைமைத்துவத்தை எடுத்துக்காட்டுகிறார். அவர் அணிகளுக்கிடையே திறந்த தொடர்பாடலை ஊக்குவிப்பதுடன், யோசனைகளைச் சுதந்திரமாகப் பகிர்ந்துகொள்ள ஊழியர்களுக்கு அதிகாரம் அளிக்கிறார். இந்த அணுகுமுறை மன உறுதியை அதிகரிப்பது மட்டுமின்றி, கம்பனியின் போட்டித்தன்மைக்கு அவசியமான புத்தாக்கத்தையும் தூண்டுகிறது.

ஒரு வலுவான சந்தைப்படுத்தல் தந்திரோபாயத்திற்கான அவசியத்தை உணர்ந்து, **மார்க்** என்பவரின் தலைமையிலான சந்தைப்படுத்தல் முகாமைத்துவ அணியானது, வளர்ந்துவரும் போக்குகள் மற்றும் வாடிக்கையாளர்களின் விருப்பங்கள் ஆகியவற்றை அடையாளங் காண்பதற்காக ஒரு சந்தை ஆய்வை மேற்கொண்டது. பண்டக்குறியின் கட்புலனாகும்தன்மை (brand visibility) மற்றும் வாடிக்கையாளர் ஈடுபாட்டை அதிகரிக்கும் நோக்கில் தங்களின் பிந்தைய உற்பத்திப் பொருளின் தனித்துவமான அம்சங்களை எடுத்தியம்புகின்ற பல -வழிப் பிரச்சாரத்தை அவர்கள் விருத்தி செய்தனர். சமூக ஊடகங்கள், செல்வாக்குச் செலுத்தும் பங்குடமைகள் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட விளம்பரப்படுத்தல்கள் போன்றவற்றை மேம்படுத்துவதன் மூலம் அவர்கள் பயனுறுதிமிக்க வகையில் புதிய பார்வையாளர்களை அடைகிறார்கள்.

அதே நேரத்தில், பணியாளர்கள் சுறுசுறுப்பாகவும் சந்தை மாற்றங்களுக்குப் பதிலளிக்கக்கூடியவர்களாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காக மனித வள முகாமையாளரான **ஜோன்** ஊழியர்களின் திறன்களை மேம்படுத்த இலக்கு வைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறார். தொழில்சார் அபிவிருத்தி மற்றும் நேர்மறையான பணியிடச் சூழல் ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலம் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ள ஊக்குவிக்கப்பட்ட அணி ஒன்றை அவர் வளர்க்கிறார். மேலும், கம்பனிக்கு ஊழியர்களை பணியமர்த்தியதன் (hiring) பின்னர் தொழிலுக்கு அறிமுகப்படுத்தும் (induction) நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்படுகிறது.

இந்த முயற்சிகள் வெளிவருகையில், கம்பனியின் நீண்ட கால நோக்கங்களை அதன் செயற்பாட்டு இயலுமைகளுடன் சீரமைக்க தந்திரோபாய முகாமைத்துவக் கோட்பாடுகளை **ஆன்** அறிமுகப்படுத்தினார். இதில் அளவிடத்தக்க இலக்குகளை அமைப்பது மற்றும் முன்னேற்றத்தைத் தொடர்ந்து மீளாய்வு செய்வது போன்றவை உள்ளடங்குகின்றன. தலைமைத்துவம், சந்தைப்படுத்தல் மற்றும் மனித வளம் ஆகியவற்றில் இருந்து நுண்ணறிவுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் புத்தாக்கமான தீர்வுகள் நீடித்திருக்கத்தக்க வளர்ச்சிக்காக தம்மை நிலைநிறுத்துகின்றன. இது புத்தாக்கம், ஊழியர்களின் திருப்தி மற்றும் தந்திரோபாய சீரமைப்பு ஆகியவை போட்டி மிகுந்த தளத்தில் நிறுவனத்தை முன்னோக்கி செலுத்துவதை உறுதி செய்கின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) **Sunshine (Pvt) Ltd.** இல் **ஆன்** இனுடைய தலைமைத்துவப் பாணி, கூட்டுக் கலாசாரத்தை வளர்க்கவும் ஊழியர்கள் மத்தியில் புத்தாக்கத்தைத் தூண்டவும் எவ்வாறு பங்களிப்புச் செய்கிறது என்பதற்கான மூன்று (03) வழிகளை **விபரிக்குக**. (06 புள்ளிகள்)

(b) **Sunshine (Pvt) Ltd.** இற்கு பண்டக்குறியிடல் (branding) ஏன் முக்கியமானது என்பதற்கான மூன்று (03) காரணங்களை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(c) தொழிலுக்கு அறிமுகப்படுத்தல் என்பது **Sunshine (Pvt) Ltd.** இற்கு ஏன் முக்கியமானது என்பதற்கான நான்கு (04) காரணங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) **Sunshine (Pvt) Ltd.** இன் தந்திரோபாயத் திட்டமிடல் செயன்முறையில், நிலைமை மீளாய்வு (position audit) எவ்வாறு ஒரு முக்கிய செயற்பாடாக உள்ளது என்பதை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) மொத்த தர முகாமைத்துவத்தின் (TQM) ஐந்து (05) கோட்பாடுகளைக் **குறிப்பிடுக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| அறிவு (1) | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | வரைக (Draw) | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | தொடர்புபடுத்துக (Relate) | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | கூறுக/ குறிப்பிடுக(State) | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | அடையாளங்காண்க / இனங்காண்க (Identify) | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | நிரற்படுத்துக / பட்டியலிடுக (List) | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| முற்றடக்கம் (2) | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | ஏற்பிசைவு செய்க (Recognize) | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret) | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | விளக்குக (Describe) | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | விபரிக்குக (Explain) | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define) | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பிரயோகம் (3) | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile) | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | வரைக (Graph) | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | மதிப்பிடுக (Assess) | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | தீர்க்குக (Solve) | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | தயாரிக்குக (Prepare) | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate) | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | கணிக்குக / கணிப்பிடுக (Calculate) | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | பிரயோகிக்குக (Apply) | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| பகுப்பாய்வு (4) | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | தொடர்பாடுக(Communicate) | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | சுருக்கமாகக குறிப்பிடுக(Outline) | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | வேறுபடுத்துக (Contrast) | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss) | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate) | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | பகுப்பாய்வு செய்க (Analyze) | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |